மன்றத்தால் அனுப்பப்படும் விளக்கத்தின்மீது அரசு எவ்வித முடிவும் நீதிமன்ற இறுதி ஆணை வரும் வரை எடுக்க வேண்டாம் என்று ஆணை பிறப்பித்துள்ளது. உயர் நீதிமன்றத்தில் அரசு எதிர் மனு தாக்கல் செய்து, இந்த வழக்குகள் நிலுவையில் உள்ளன.

15-11-2002 அன்று நடந்த கூட்டங்களில் அடங்கிய பொருட்கள், நீதிமன்ற உத்தரவுக்கு உட்பட்டிருப்பது, நகர்மன்றக் கூட்டங்கள் பிறகு நடத்துவதற்குத் தடையாக இல்லை. ஆயினும், நகர்மன்றத் தலைவர், நகர்மன்றக் கூட்டம் நடத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆதலால் நகர்மன்றம் செயல்பாட்டில் இல்லை. அபிவிருத்தி திட்டப் பணிகள் ஏதும் நடைபெறவில்லை. நகர்மன்றத் தலைவரின் ஒத்துழையாமையால், நகராட்சி சொத்துக்கள் பொது ஏலத்தில் கொண்டுவரப்படவில்லை. இதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. நகர்மன்றத் தலைவரின் பிடிவாதத்தால், விழுப்புரம் நகராட்சியில் உள்ள பொதுமக்களுக்குப் பயனளிக்கும் எந்த வளர்ச்சிப் பணிகளும் நடைபெறவில்லை.

பின்னர் 5-9-2003 ஆம் தேதிய கடிதத்தில், விழுப்புரம் நகராட்சி ஆணையாளர் நகர்மன்றம் தொடர்ந்து தனது கடமையைச் செய்யாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி, தக்க தீர்வு தருமாறு கூறியிருந்தார். மேற்கூறிய நிலையில், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 41-ன்கீழ் செயல்படாத நகர்மன்றத்தைக் கலைக்கலாம் என்ற கருத்துரு அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரால் 9-9-2003 அன்று அனுப்பப்பட்டது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், 1920, பிரிவு 13-ன்படி நகர்மன்றத் தலைவர், நகர்மன்றக் கூட்டங்களை நடத்த வேண்டும்; மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தில் அளிக்கப்பட்ட கடமைகளைச் செய்வதுடன் அதிகாரங்களையும் செலுத்த வேண்டும். நகர்மன்றத் தலைவரின் செயலற்ற தன்மையால், நகர்மன்ற நிர்வாகம் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

3. கவன ஈர்ப்பு

பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டம், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்)